**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ம் நாள் வியாழக் கிழமை

**அசல் வழக்கு எண். 22/2019**

வாதி தரப்பு சாட்சியாக PW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முத்துலட்சுமி | Husband Name | : | காத்தலிங்கம் |
| Village | : | சித்தன்வாழூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | | Age | : | 56 |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு **விசாரணை** -

நான் பிறந்ததும் என்னை திருமணம் செய்து கொடுத்ததும் சித்தன்வாழூரில் தான். இவ்வழக்கிற்கு விபரம் சொன்னது நான் தான். எனது அப்பா வழக்குசொத்தினை வாங்கியது எந்த வருடம் எந்த தேதி என்று எனக்கு தெரியாது. நான் பிறந்த வருடம் தேதி எனக்கு தெரியாது, என்னிடம் உள்ள ஆதாரங்களை கொடுத்து தெரிவித்துக்கொள்வேன். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **வா.சா.ஆ.1** எனது வீட்டில் இருந்தது. அந்த ஆவணத்தை எனது தந்தை வாங்கி வைத்திருந்தார். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **வா.சா.ஆ.1** ஆவணத்தை எனது தந்தை எப்படி வாங்கினார் எந்த வருடம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கு சொத்தினை எனது தந்தை ஜானகி அம்மாளிடம் இருந்து கிரயம் பெற்ற விபரம் எனக்கு தெரியும், அப்போது எனக்கு வயது 15 இருக்கும். நான் பள்ளி சென்று படிக்கவில்லை. எனது அப்பா நான் மூத்த மகளாக இருப்பதால் வீட்டில் நடக்கும் நல்லது கெட்டதினை என்னிடம் சொல்லி செய்வார் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தினை எனது அப்பா இவ்வழக்கின் பிரதிவாதிகளின் அப்பா கழுவையனிடம் போக்கியத்திற்கு கொடுத்த விபரம் எனக்கு தெரியும். எனக்கு

20 வயது 21 வயது இருக்கும்போது இவ்வழக்கு சொத்தினை கழுவையனிடம் போக்கியத்திற்கு வைத்ததாக எனது அப்பா என்னிடம் சொன்னார். போக்கியத்திற்கு வைக்கும்போது வருடம் 1985, 1986 இருக்கும் என்றால் வருடம் நியாபகமில்லை. இவ்வழக்கு சொத்தின் அசல் பத்திரத்தினை கழுவையனிடம் எனது தந்தை கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். பணம் பெற்றுக்கொண்டு பத்திரத்தை கழுவையனிடம் ஒப்படைக்கும்போது ஊர்க்காரர்கள் இரண்டு பேர் இருந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தை கழுவையனிடம் ஒப்படைத்து பணம் பெற்றுகொண்ட விபரத்தினை பேப்பரில் எழுதினார்களா என்றால் இல்லை. எனது தந்தை கையொப்பம் இடுவாரா கைநாட்டு இடுவாரா என்றால் கைரேகைதான் வைப்பார். எனது தந்தைக்கு எழுதப்படிக்க தெரியும் என்றாலும் கையொப்பம் தான் செய்வார் என்றாலும் நான் இவ்வழக்கிற்காக பொய்யாக ரேகைதான் வைப்பார் என்று சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்து சுமார் 20 வருடங்கள் இருக்கும், எனது அப்பா இறந்த வருடமே வழக்கு சொத்தினை பிரதிவாதிகளிடம் கேட்டோம். எங்கள் ஊரை சேர்ந்த ஊர் நாட்டாமையான அய்யாதுரை முன்னிலையில் வழக்கு சொத்தினை பிரதிவாதிகளிடம் சென்று கேட்டோம். நாங்கள் பிரதிவாதிகள் இருவரையும் எங்கள் ஊர் நாட்டாமையான அய்யாதுரை அவர்கள் வீட்டிற்கு அழைத்து சென்று வழக்குசொத்தினை எங்களிடம் திருப்பி தருமாறு கேட்டோம். இது சம்பந்தமாக அய்யாதுரை வீட்டில் பேசும்போது அய்யாதுரை மட்டும்தான் இருந்தார். இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி கருணாநிதி வலங்கைமானுக்கு குடிபெயர்ந்து சுமார் 25 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். 2ம் பிரதிவாதி கருணாநிதி விவசாய வேலை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். அவருக்கு சொந்தமாக விவசாய நிலம் இருக்கிறதா என்ற விபரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கலியபெருமாளின் வயலுக்கு நான் கூலி வேலைக்கு செல்வேனா என்றால் நான் அவர்களின் வயலுக்கு கூலி வேலைக்கு செல்லமாட்டேன்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.07.24 19:18:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.